ACT Council of Parents & Citizens Associations
*The parent voice on public education*

Companion House
Assisting Survivors of Torture and Trauma

# உங்கள் குழந்தையின் கல்விக்கு உதவுதல்

**ACT-யிலுள்ள பள்ளி வயதுக் குழந்தைகளின் புலம்பெயர் மற்றும் அகதி பெற்றோருக்கான தகவல் தாள்**

## பொதுத் தகவல்கள்

**உங்கள் குழந்தையின் கல்விக்கு உதவுவதற்காக நீங்கள் செய்யக்கூடிய சில எளிய செயல்கள் வருமாறு:**

- உங்கள் குழந்தை (உடல்நலமின்றி இருந்தாலன்றி) தினமும் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்யுங்கள்.
- உங்களால் இயன்றவரை அதிக அளவில் உங்கள் குழந்தையின் பள்ளியுடன் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழந்தையின் ஆசிரியருடன் தொடர்ந்து தகவல் பரிமாற்றம் செய்யுங்கள்.
- தனது வீட்டுப்பாடத்தைச் செய்ய உங்கள் குழந்தைக்கு உதவுங்கள். வாரந்தோறும் வீட்டுப்பாடத்திற்காக போதிய நேரம் மற்றும் நல்ல பணிச் சூழலை உருவாக்குங்கள்.
- உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்காக, புலம்பெயர் மற்றும் அகதி குடியேறல் சேவைகள் (MARSS) ஓர் இலவச வீட்டுப்பாடத் திட்டத்தை (PASS) வழங்குகிறது. பதிவு செய்வதற்கான **தொலைபேசி (02) 6248 8577**.
- சிறு குழந்தைகளாக இருந்தால், தினமும் அவர்களுக்கு படித்துக் காட்டுவதுடன், போதிய அளவு வளர்ந்தவுடன், ஆங்கிலத்தில் அல்லது உங்கள் மொழியில் அவர்கள் படிப்பதைக் கேளுங்கள், மதிப்புவாய்ந்த படிக்கும் திறனைக் கற்பதற்கு இரண்டுமே உதவும்.
- கான்பெர்ராவில், நான்கு வயதுடைய குழந்தைகள் அனைவருக்கும் சிறார் பள்ளி இலவசமானது, மேலும் புலம்பெயர் மற்றும் அகதி குழந்தைகளால் சில நேரங்களில் மூன்றரை வயதிலேயே கல்வியைத் தொடங்க முடிகிறது. உங்கள் உள்ளூர் சிறார் பள்ளியில் விசாரியுங்கள்.

## உங்கள் குழந்தையின் பள்ளியுடன் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுதல்

**உங்கள் குழந்தையின் பள்ளியுடன் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு, நல்லுறவை வளர்த்துக்கொள்ள பல வழிகள் உள்ளன:**

- பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் அனைவருமே தங்கள் குழந்தைகளின் பள்ளிக்கு வரலாம். உங்களுக்கு பள்ளியைப் பற்றிய கேள்விகள் ஏதேனும் இருந்தால், பள்ளியின் முன் அலுவலகத்தை அழைக்கவும். ஒவ்வொரு ஆண்டும், பள்ளியின் தொலைபேசி எண்ணை வைத்திருப்பதையும், பதிவு செய்வதையும் நினைவில் கொள்ளுங்கள்.
- குழந்தையை பள்ளியில் விடுகின்ற மற்றும் அழைத்துச் செல்கின்ற நேரங்களில் ஆசிரியரிடமும் மற்ற பெற்றோர்களிடமும் இயல்பாக உரையாடுங்கள்.
- பெற்றோர்/ஆசிரியர் இரவுகளுக்குச் செல்லுங்கள், இங்கு நீங்கள் கேள்விகள் கேட்கலாம் மற்றும் உங்கள் குழந்தையின் ஆசிரியரிடம் உங்கள் கவலைகளைத் தெரிவிக்கலாம். உதவிக்கு ஒரு நண்பரையோ அல்லது உறவினரையோ நீங்கள் உடன் அழைத்துச் செல்லலாம்.
- பெற்றோர்/ஆசிரியர் கூட்டத்திற்கு ஒரு மொழிபெயர்ப்பாளரை வழங்கும்படியும் நீங்கள் பள்ளியை கேட்டுக் கொள்ளலாம்.
- பள்ளி சிற்றுண்டிசாலை அல்லது நூலகத்தில், பள்ளி விழா, உழைக்கும் தேனீக்கள் போன்றவற்றிற்கு உதவுங்கள்.
- வகுப்பறையில் உதவுங்கள் – உங்கள் குழந்தையின் ஆசிரியரிடம் எவ்வாறு உதவலாம் என்று கேளுங்கள். இது ஒழுங்குபடுத்துதல் அல்லது உங்களுக்குள்ள திறனை பகிர்வதாக இருக்கலாம்.
- உங்களால் முடியுமென்றால், பள்ளியின் அனுமதியுடன், வகுப்பு சுற்றுலாக்களுக்குச் செல்லுங்கள்.
- P&C (பெற்றோர்கள் மற்றும் குடிமக்கள் கூட்டமைப்பு) கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள் – ஒரு நண்பரையும் நீங்கள் உடன் அழைத்து வரலாம். P&C கூட்டங்களுக்கு பெற்றோர்கள் வரவேற்கப்படுவதுடன், அதில் கலந்து கொள்வதற்கும் ஊக்கமளிக்கப்படுகின்றனர்.

## ஏதேனும் பிரச்னை இருந்தால்

- உங்கள் கவலைகளை பள்ளிக்குத் தெரிவிப்பதற்கு நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்த விரும்பினால், **டிரான்ஸ்லேட்டிங் அன்ட் இன்டர்ப்ரெட்டிங் சர்வீஸ் (TIS)**-லிருந்து ஒரு மொழிபெயர்ப்பாளரை பள்ளியால் இலவசமாக ஏற்பாடு செய்ய முடியும். **தொலைபேசி: 131 450**
- உங்கள் குழந்தையின் ஆசிரியரிடமோ அல்லது கிடைக்கும் பட்சத்தில் கூடுதல் மொழி/பேச்சுமொழியான (EAL/D) ஆங்கில ஆசிரியரிடமோ பேசுங்கள்.
- பிரச்னையின் தன்மைக்கேற்ப, உதவும் பொருட்டு, ஆண்டின் ஒருங்கிணைப்பாளர், மூத்த ஆசிரியர், துணைத் தலைமயாசிரியர் அல்லது தலைமயாசிரியர் ஆகியோரையும் ஈடுபடுத்த, நீங்களோ அல்லது பள்ளியோ முடிவு செய்யலாம்.
- எந்த நேரத்திலும், உதவிக்காக பள்ளி ஆலோசனையாளரை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். அவர்களுடைய தொடர்பு விவரங்கள், பள்ளியின் முன் அலுவலகம் அல்லது வலைத்தளம் அல்லது செய்திக்கடிதத்தில் கிடைக்கும்.
- உங்களுக்கு மேலும் உதவி தேவைப்பட்டால், உங்களுக்கு ஆலோசனை வழங்க உதவுவதற்காக, நீங்கள் இன்னொரு சமுதாய சேவையைத் தொடர்பு கொள்ளலாம் – உதாரணமாக **கம்பானியன் ஹவுஸ். தொலைபேசி: (02) 6251 4550**
- ACT-யில் பள்ளி செல்லுதல் தொடர்பான பெற்றோரின் பங்கு குறித்து உங்களுக்கு மேலும் விவரங்கள் தேவைப்பட்டால், தொடர்பு கொள்ளவும் **ACT P&C கவுன்சில். தொலைபேசி: (02) 6241 5759**

**உங்களுக்கு ஏதேனும் பிரச்னை இருந்தால் உதவும்படி கேளுங்கள். பள்ளி ஆசிரியர்கள் விருப்பத்துடன் உதவுவார்கள்.**